இல்லாத நிலையில் பொதுசனத் தொடர்புச் சாதனங்களின் விரிவான தூண்டுதல்களோடு இது முழு விவகாரத்தையும் ஒரு அறிவு வேலையாக மாற்றிவிட்டது.

சிறிலங்கா இராணுவம் இடைக்கிடை செய்யும் ஷெல் தாக்குதலை நிறுத்தியதோடு, யாழ்ப்பாணத்தில் தற்காலிகமான ஒரு அமைதி நிலவியது. விடுதலைப் புலிகள் பிரதான நிறுவனங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் கவனஞ்செலுத்தினர். பிரசைகள் குழுக்கள் பிரச்சினையாக இருக்கவில்லை. பல்கலைக்கழகம் தவிர்ந்து எவ்விடத்தும் பலாத்காரமோ பயமுறுத்தலோ தேவைப்படவில்லை. ஆஸ்பத்திரிகளிலும் நிருவாக அமைப்புகளிலும் வைத்தியர்களுக்கும் நிருவாக அலுவலகங்களுக்கும் தமது சுயமரியாதையைப் பாதுகாக்கும் அளவுக்குப் போதிய சுதந்திரம் வழங்கப்பட்டது. மக்கள் இயக்கங்கள் மூலமோ வேறு ஆயுதக் குழுக்கள் மூலமோ வெளிக்காட்டப்படாத கருத்து வேறுபாடு கொண்ட தனிநபர்களின் எதிர்ப்பு சகித்துக்கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கம் தம் பக்கம் சேர்ந்த சில பத்திரிகையாளர் மூலம் பத்திரிகையாளர் சங்கமொன்றை நிறுவியது. ஏனைய பத்திரிகையாளர் அநேகருக்கு இதை ஏற்றுக்கொள்வது கடினமாயிருந்தது. அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட சம்பள விகித அடிப்படையில் யாழ்ப்பாணப் பத்திரிகையாளருக்கு வழங்கப்படாமைபற்றித் தாம் அக்கறை கொண்டிருப்பதே பத்திரிகையாளர் கூட்டத்தைத் தாம் கூட்டுவதற்கு காரணமென விடுதலைப்புலிகள் கூறினர். இது தொடர்பாக உதயன் ஆசிரியரும் ஏனையோரும் பேசினர். "பத்திரிகையாளரின் சம்பளம் அவர்களது சொந்த விடயம். அது ஆயுதப் போராட்ட அமைப்பின் விடயமன்று. நாம் எதைச் சிந்திப்பது, எதை எழுதுவது என்று எவரும் கட்டுப்படுத்தமுடியாது" என அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆயினும் இந்தத் துணிவான வார்த்தைகள் நடைமுறையிற் பிரதிபலிக்கவில்லை. குறிப்பிட்ட சில எல்லைகளைத் தாண்டுவதற்கு ஒருவர் மிகவும் துணிவானவராக இருக்கவேண்டும் என அனைவருக்கும் தெரியும். ஈழநாடு பத்திரிகை நிருவாகம் புதிய நிலைமைச் சூழ்நிலையில் குறிப்பிட்ட ஓர் பத்திரிகையாளர் அங்கு பணி செய்வது தமக்கு தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்தும் எனக் கருதி அவரை வேலை நீக்கம் செய்தது.

குறிப்பு:

1989 நொவம்பர் 6ம் திகதி, சண்முகலிங்கம் என்னும் அப்பத்திரிகையாளர் விடுதலைப்புலிகள் இயக்கத்தால் கடத்திச்செல்லப்பட்ட பின் அவரைக் காணமுடியவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கம் கிராமிய நீதிமன்றங்கள், சிற்றூராவைகள், கலாச்சாரக் குழுக்கள், அபிவிருத்திக் குழுக்கள் போன்ற அமைப்புகள் நிறுவி மேலும் முன் சென்றது. விடுதலைப்புலிகள், இந்த அமைப்புகளில் பணியாற்றிய ஆட்கள் மீது தனிப்பட்ட வகையில் அவர்கள் மீது நம்பிக்கை வைக்காதபோதும் அவர்களைத் தற்காலிகமாக பயன்படுத்துவதாகவே கருதினர். "அபாயகரமான நாட்களிலும், இலங்கை இராணுவம் எங்களைத் தேடி வேட்டையாடிய போதும்



எங்களோடு முன்னர் நின்றவர்கள் இன்று துடைப்பத்தடியால் கூட எங்களைத்தொட மறுக்கிறார்கள். ஆனால், பெரும் எண்ணிக்கையில் எங்களோடு இன்று வந்து சேருபவர்கள், எங்களால் 'சமூகவிரோத சக்திகள்' என முன்பு இனங்காணப்பட்டவர்கள்தாம். ஏன் இது?" என்று விடுதலைப்புலிகளின் உயர்தலைவர் ஒருவர் தனது பழைய நண்பனும் சிரேஷ்ட பத்திரிகையாளருமான ஒருவரைக் கேட்டார். அந்த நண்பன், "உங்களை நீங்கள் அறிந்து கொள்வதில் உங்களுக்கு சிரமமேதும் இருக்க முடியாது" என்று பதிலளித்தான்.

யாழ்ப்பாண மக்கள் மந்தை வாழ்க்கை வாழத் தொடங்கினர். முன்னர் இலங்கை அரசின் அடக்குமுறையை எதிர்க்கும் உணர்வைக் காட்டிய மக்கள் இப்பொழுது ஜோர்ஜ் ஓர்வலின் "விலங்குப்பண்ணை" (Animal Farm) நாவலில் வரும் விலங்குகளின் விலங்குப் பண்ணை சமாதானத்தை இப்பொழுது அனுபவித்தார்கள். தமது அயலவர் ஒருவர் திடீரெனக் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போனால் மக்கள் அதுபற்றிப் பாராமுகமாயிருந்தனர். இவ்வாறு இருக்கத் தயாரில்லாத சிலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாவர். விஜிதரன், ரஜகரன் எனும் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் விவகாரத்தின்போது, இத்தகைய சூழ்நிலைகளிலே, அவர்கள் துணிகரமாகச் செயற்பட்டார்கள். இளைஞர்களின் இலட்சிய வேட்கையை அடக்க முடியவில்லை என்பது ஆறுதல் தரும் ஒரு சிந்தனை.

1988 நொவம்பர் ஆரம்பத்தில் இரு நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடந்தன. அவை அடிப்படைச் சுதந்திரங்களை மீறுவதற்கு எதிராக யாழ்ப்பாணத்திலே மக்கள் எதிர்ப்பைக் கிளப்பிய இறுதியான இரு நிகழ்வுகளாகும். இது 1980களின் ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக நடந்த மக்கள் எதிர்ப்பு போன்றதன்று. அது பெருமளவில் உற்சாகத்தைக் காட்டுகின்ற முற்போக்கு இயக்கமாயிருந்தது. இப்போதையது, பெரும்பாலும் பின்னணிப் பாதுகாப்பு நடவடிக்கையாக இருந்தது. அந்த எதிர்ப்பு முடிவுற்றதும், அதன் தலைவர்கள் தலைமறைவாகவோ அல்லது வெளிநாட்டுக்குச் செல்லவோ வேண்டியிருந்தது. தலைவர்கள் பலரும் சமூகத்தின் கீழ்மட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான சாதாரண பெண்களும், அவசியமானதும் மூத்தவர்கள் செய்வதற்குப் பின்வாங்கியதுமான ஒன்றைச் செய்வதில் அரியதொரு துணிவைக்காட்டினார்கள். இவ்விரு நிகழ்வுகளும் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி நடந்தவையாகும்.

அருணகிரிநாதன் விஜிதரன் என்பவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு வர்த்தகத்துறை மாணவர். 1988 நொவம்பர் 4ம் திகதி அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து காணாமற்போகும்வரை, அவரைப்பற்றிப் பொதுவாக யாருக்கும் தெரியாது. விஜிதரன் ஏன் கடத்தப்பட வேண்டுமென்பது பொதுவான கேள்வியாக இருந்தது. அவர் அரசியல் ஈடுபாடில்லாத கேளிக்கைப்பிரியரான சாதாரண மாணவன். இந்த அம்சமே அவரைக் கடத்தியது பற்றிச் சில சந்தேகங்களை எழுப்பியது. அவர் முக்கியமான ஒருவரைச் சிறிது பாதிக்கின்றதும் அதேவேளை மாணவர்கள் எவரும் அது பற்றி கூறவிரும்பாததுமான கருத்துக்களைக் கூறினாரா? இவை பற்றிய உண்மையை நாம் என்றுமே அறியாமல் போகலாம்.